DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No. 16/2020**

அ.சா.2

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | பால விக்னேஷ்வரி | Caste: | |
| Husband Name: | காளிஸ்வரன் | Calling: | இல்லத்தரசி |
| Village: | கிழக்கு தெரு, முதுகுளத்தூர் | Religion: | |
| Taluk: | முதுகுளத்தூர் | Age: | 38 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 02.02.2026

( 3, 4 எதிரிகள் ஆஜர் இல்லை .BNSS பிரிவு 355-ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. 1,2 எதிரிகள் ஆஜர்.)

**முதன்மை விசாரணை**

நான் முதுகுளத்தூர் கிழக்கு தெருவில் வசித்து வருகிறேன். அ.சா.1 காளிஸ்வரன் என் கணவர். சா.ப.சா.3 கருப்பையா என் மாமனார், இறந்துவிட்டார். சாட்சிகள் சரவணகுமார், செந்தில்குமார், செந்தூரான் ஆகியோர்களை தெரியாது. ஆஜர் 1,2 எதிரிகளை தெரியும். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகாத 3,4 எதிரிகளை தெரியாது. நான் பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்த வீரகுடி வெள்ளாளர் சமூகத்தை சார்ந்தவள். என் கணவர் பட்டியல் இனத்தை சேர்ந்த தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சார்ந்தவர். எதிரிகளின் மதம், சாதி தெரியாது. என் கணவர் (அ.சா.1) காளிஸ்வரன் கொடுத்த புகார் சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். 2016, 2017 காலகட்டங்களில் இராமநாதபுரம் பெரியார் நகரில் நானும் என் கணவரும் வசித்து வந்தோம். இராமநாதபுரம் எம்ஜி மகாலுக்கு எதிரே பியூ ஹுண்டாய் ஷோரூமில் என் கணவர் டீம்

லீடராக வேலை பார்த்து வந்தார். அந்த கார் ஷோரூமின் மேனேஜராக 1ம் எதிரி முகமது தாஹா இருந்தார். கார் விற்பனை செய்த வகையில் விற்பனை தொகை ரூபாய் 384000/- என் கணவர் கட்ட வேண்டியிருந்தது. என் கணவரால் குறிப்பிட்ட தேதியில் செலுத்த முடியவில்லை. ரூபாய் 210000/- மட்டும் கட்டியிருந்தார். மீதி தொகையை செலுத்துவதற்கு தவணை கேட்டு அதற்கு பதிலாக என் கணவர் பெயரில் இருந்த ஆல்டோ 800 காரையும், பல்சர் பைக்கையும் கொடுத்திருந்தோம். மீதி தொகையை செலுத்திவிட்டு காரையும் பைக்கையும் வாங்கிக்கொள்வதாக 1ம் எதிரி முகமது தாஹாவிடம் கொடுத்திருந்தோம். சொன்ன தேதியில் கொடுக்க முடியாமல் காலதாமதமானதால் 17.04.2017ம் தேதி மதியம் 1-1.15 மணியளவில் என் கணவர் வீட்டில் சாப்பிட்டு கொண்டிருக்குமபோது 1ம் எதிரி என் கணவரின் போனுக்கு கூப்பிட்டார். இராமநாதபுரம் டிவிஎஸ் ஷோரூமிற்கு எதிர்புறத்தில் நான் வந்து அழைத்து செல்கிறேன் என்று சொன்னார். என்கணவர் 1.15-1.20 மணியளவில் அங்கு சென்றார். 1.45-1.50 மணியளவில் என் கணவரின் போனில் இருந்து எனக்கு அழைப்பு வந்தது. என் கணவர் பணம் கொடுக்கவில்லை என்பதால் குமரையா கோவில் அருகில் உள்ள இக்லூ ஹோட்டல் அறை எண். 320ல் தன்னை வைத்திருப்பதாகவும், எவ்வளவு சீக்கிரம் பணம் தயார் செய்து கொடுக்க முடியுமோ கொடுங்கள் முகமது தாஹாவும் அவருடம் கூட இருந்த நபரும் பேசுவதை பார்த்தால் எனக்கு பயமாக இருக்கிறது என்று சொன்னார். நான் பயந்துகொண்டு என் மாமனாருக்கு தகவல் தெரிவித்தேன். என் மாமனாரிடமும் என் கணவர் என்னிடம் கூறிய விசயத்தை கூறியிருக்கிறார். மறுபடி 10 நிமிடங்கள் கழித்து என் கணவரின்

செல்போனிற்கு அழைத்த போது மணி ஒலித்துகொண்டிருந்தது. ஆனால் எடுக்கவில்லை. பிறகு 3.00 மணியளவில் என் கணவர் என் அழைப்பை ஏற்று பேசினார். அவர் பேசும்போது ஒரு தோட்டத்தில் இருப்பதாகவும் அங்கு அழைத் வந்துவிட்டதாகவும் சொன்னார். அந்த தோட்டம் தென்னந்தோப்பு என்றும் சின்னமாயாகுளத்தில் இருப்பதாகவும் என் கணவர் சொன்னார். முகமது தாஹா என் கணவரின் அழைபேசியிலிருந்து அழைத்துவிட்டு என் கணவரை அடித்தார். அவர் அடிக்கும் சத்தமும் அழுகை சத்தமும் கேட்டது. நான் என் கணவரை அடிக்காதீர்கள் எப்படியாவது பணத்தை தயார் செய்து தந்துவிடுகிறேன் என்று சொன்னபோது அவர் முகமது தாஹா என்னையும் நீ என்ன சப்போர்ட்டா என்று திட்டினார். நான் பணம் தயார் செய்து தந்துவிடுகிறேன் என்று பேசிக்கொண்டிருக்கும்போதே நீயெல்லாம் எனக்கு புத்தி சொல்லக்கூடாது என்று அழைப்பை துண்டித்துவிட்டார். அதேபோல் என் மாமனாரிடமும் பேசியுள்ளார். என் மாமனாரும் எனக்கு போன் செய்து அழுதுகொண்டு சீக்கிரம் பணத்தை தயார் செய்து கொடுத்துவிடுகிறோம், அதனால் என் கணவரை அடிக்க வேண்டாம் என்று சொல் என்று என்னிடம் கூறினார். அதன்பிறகு அன்று மாலை முழுவதும் என் கணவருக்கு போன் செய்தோம், அழைத்தோம். அழைப்பு போய்கொண்டிருந்தது, யாரும் எடுக்கவில்லை. அன்று இரவு முழுவதும் யாரும் எங்கள் அழைப்பை ஏற்கவில்லை, மறுநாள் காலை என் மாமனார் மீதி பணத்தை தயார் செய்துகொண்டு என் வீட்டிற்கு வந்தார். மறுநாள் காலை 8.30-9.00 மணியளவில் என்னுடைய கணவர் செல்போனில் இருந்து மதன் என்பவர் பணத்தை தயார் செய்துவிட்டீர்களா என்று கேட்டார். அந்த மதன் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். நாங்கள் பணம்

தயார் செய்துவிட்டோம். எவ்வளவு சீக்கிரம் என் கணவரை கொண்டு வந்து விடமுடியுமோ விடுங்கள் என்று சொன்னோம். அன்று 11.00 மணியளவில் பெரியார் நகரில் உள்ள ஒரு மரம் அருகே வந்து வெள்ளை நிற இயான் காரில் 1ம் எதிரி முகமது தாஹாவும், 2ம் எதிரி மதனும் மற்றும் இரண்டு நபர்கள் காரின் பின்புறம் அமர்ந்து என் கணவரை அங்கு அழைத்து வந்தார்கள். என் மாமனார் அப்போது ரூபாய் 50000/– தயார் செய்துவிட்டோம். அதை வாங்கிக்கொண்டு என் மகனை விட்டு விடுங்கள் என்று சொன்னார். முழுபணத்தையும் தருவதாக தானே சொன்னீர்கள் இப்போது பாதி பணத்தை தயார் செய்துவிட்டதாக சொல்கிறீர்கள், முழுப்பணத்தையும் தருவதாக சொன்னதால்தானே கொண்டு வந்தோம் என்று சொல்லிவிட்டு என் கணவரை மீண்டும் அழைத்து சென்றுவிட்டார்கள். மேலும் உயிரோடு கொண்டு வந்ததால்தானே பாதி பணத்தை தருவதாக சொல்கிறீர்கள் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார்கள். மறுபடியும் என் மாமனார் மீதி பணத்தை தயார் செய்து தந்துவிடுகிறோம் என் மகனை கொண்டு வந்து விட்டுசெல்லுங்கள் என்று போனில் தொடர்பு கொண்டு பேசியபோது போலிசிடம் சென்றால் உன் மகனை வெட்டி புதைத்துவிட்டு எப்போது வந்தான் என்று சொல்லிடுவோம் என்று மிரட்டினார்கள். பிறகு நானும் என் மாமனாரும் மீதி பணத்தை தயார் செய்து மதியம் 3.00 மணியளவில் போன் செய்தோம். 3.00 மணிக்கு பேசும்போது கீழக்கரை ஏர்வாடி அருகே ஒரு ஹோட்டலில் இருப்பதாக சொன்னார்கள். ஒரு மணி நேரத்தில் உன் கணவரை அழைத்து வந்துவிடுகிறோம் என்று என்னிடம் சொல்லிவிட்டு அழைத்து வரவே இல்லை, நானும் பலமுறை அழைத்தும் என்னுடைய அழைப்பை ஏற்கவில்லை. மாலை 4.00 மணியளவில் என் கணவர்

பேசும்போது நாங்கள் பணத்தை தயார் செய்துவிட்டோம் என்று சொல்லும்போது முகமது தாஹா இவள் என்ன தைரியமாக இருங்கள் என்று சொல்கிறாள், அப்போ இவள் போலிசுக்கு தகவல் தெரிவித்துவிட்டாளோ அதனால் உடனே விடுவிக்கக்கூடாது, காரில் வைத்து சுற்றிகொண்டே இருப்போம் என்று சுற்றிக்கொண்டே இருந்தார்கள். இரவு 10.15 மணியளவில்தான் எங்கள் வீட்டிற்கு கொண்டு வந்து விட்டார்கள். என் கணவரை எங்கள் வீட்டிற்கு அழைத்து வந்தபோது காரின் முன்புறம் முகமது தாஹாவும் மதனும் இருந்தார்கள். காரின் பின்புறம் இரண்டு நபர்களும் நடுவில் என் கணவரும் இருந்தார்கள். பணத்தை எண்ணி பார்த்து சரியாக இருந்தவுடன்தான் முகமது தாஹா மதன் என்பவரிடம், மதன் கார் கதவை திறந்து அவனை வெளியே விடுடா என்று சொன்னார். போலிசிடம் சென்றால் உன் புருசனை மீண்டும் அழைத்து செல்ல வெகுநேரம் ஆகாது என்று சொல்லிவிட்டு காரை எடுத்து சென்றுவிட்டார்கள். என் கணவரால் காரை விட்டு இறங்கி நடக்க முடியவில்லை, மாடிக்கு ஏறி வர இயலவில்லை, கை, கால் , உடம்பு முழுவதும் தென்னை மட்டைகளால் அடித்த காயங்கள் இருந்தது. என் கணவரை விசாரித்தபோதுதான் எங்கு எங்கு என் கணவரை கொண்டு சென்றார்கள். என்ன செய்தார்கள் என்ற விவரத்தை சொன்னார். மேலும் ஒரு இடத்திற்கு அழைத்து சென்று பன்றிகள் இருந்ததாகவும் என் கணவரை குனிந்து நிற்க சொல்லி பள்ள சாதிக்கு பன்றிகளுடன்தான் இனப்பெருக்கம் செய்ய வேண்டும் என்று சொல்லி அடித்துள்ளார்கள். என் கணவரை கையை கட்டி அடித்ததாகவும், முகமது தாஹா ஒரு நபரை பார்த்து விக்கி நீ பாக்சர் தானே பாக்சிங் கத்துக்க என்று சொல்லி அடித்ததாகவும் அந்த நபர் என் கணவரை அடித்ததாகவும் என் கணவர்

சொன்னார். காலையில் தென்னந்தோப்பிற்கு கூட்டி சென்றபிறகு அங்கு வைத்து அடிப்பதற்கு இரண்டு, மூன்று நபர்களை அடிப்பதற்கு அழைத்துளளார். அதில் ஒரு நபர் விக்னேஷ்வரன் என்றும் மற்றொரு நபர் ரவிக்குமார் என்றும் அந்த விக்னேஷ்வரன் பாக்சர் என்றும் என் கணவர் சொன்னார். மறுநாள் என் கணவருக்கு நெஞ்சுவலி அதிகமாகிவிட்டதால் என் கணவரை 20ம் தேதி இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தோம். அங்கு மருத்துவர்கள் காயம் எவ்வாறு ஏற்பட்டது என்று கேட்டார்கள். விவரத்தை சொன்னோம். போலிசார் அங்கு வந்து விசாரித்து புகார் மனு பெற்றார்கள். புகாரை என் கணவர் கொடுத்தாக நான்தான் எழுதிக்கொடுத்தேன். புகார் மனுவில் அறிவேன் சாட்சியாக உள்ள கையெழுத்து என் கையெழுத்துதான். புகார் மனுவில் உள்ள சாட்சியின் கையெழுத்து **அ.சா.ஆ.3**. இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

இல்லை

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.02 14:58:01 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)